Registered with the Registrar of News Paper
For India under R.N.I. 11967/'67

வருட சந்தா ரூ.1/-

வருகையின் தூதன்

பரிசுத்த வேதாகமம்

God is faithful for the past seventy years.

Vol. 70 | என் வஸ்திரங்களைத் தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின் பேரில் சீட்டுப்போடுகிறார்கள். சங். 22:12 | மார்ச் 2024 | No.3

கிறிஸ்துவின் மகிமையைக் கண்டோம்

The Glory of Christ - Beheld

Charles H. Spurgeon

"அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார்; அவருடைய மகிமையைக் கண்டோம்; அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது." யோ.1:14

கிறிஸ்துவின் மகிமையைப் பார்ப்பது எத்தனை சிறப்பானது! அது ஆத்துமாவின் செயலும், இரட்சிப்பின் செயலும் ஆசீர்வாதமும் நித்தியமுமான செயலுமாகும். உங்களுக்கு இதில் விருப்பம் உண்டா? அந்த மகிமையை நாம் பார்ப்பது எப்படி? விசுவாசத்தால் பார்க்கலாம்.

முதலாவது விசுவாசத்தால் நாம் பார்ப்பது அவரது சிக்கலான நபரத்துவத்தையே. அவர் நித்தியமான வார்த்தை என்றும் உண்மையான பிதாவின் குமாரன் என்றும் அறிந்தும் விசுவாசித்தும் இருக்கிறோம். உலகத் தோற்றம் முதலே அவர் பிதாவோடு, அவரது நேசகுமாரனாக இருந்தவர். அவர் மேகங்களை எடை போடுகிறவர், ஆழங்களை அளவிடக் கூடியவர், வானங்களைத் திட்டமிடுகிறவர், சமுத்திரத்தை ஆளுகிறவர், எல்லாவற்றையும் தமது ஞானத்தால் செய்து, தமது சித்தத்தை நிறைவேற்றுகிறார். யோ. 1:3-ன்படி, "உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை". அவரைப் பிதாவின் சிங்காசனத்தில் வீற்றிருக்கிறவராகக் கண்டோம். அவர் கட்டளையிட கடல் குமுறுகிறது. அவரது மகிமையான சித்தத்திற்கு பூமியும் அதன் எல்லா படைப்புகளும் கீழ்ப்படிகின்றன. அவரது கரங்களில் தான் பரலோகம், மரணம், நரகம் ஆகியவற்றின் திறவு கோல் இருக்கிறது. அவரது தெய்வீகத்திற்கு எந்த சந்தேகமுமில்லை. ஏனெனில் அவர் "தெய்வத்தில் தெய்வமானவர்" என்று கண்டும் அறிந்துமிருக்கிறோம். "இவர் என்றென்றைக்கும் ஸ்தோத்தரிக்கப்பட்ட சர்வத்துக்கும் மேலான தேவன்" ஆமென். ரோமர் 9:5

அவரை மனிதராகவும் கண்டோம். அவர் தமது தாயின் சாரம், எலும்பின் எலும்பு, மாம்சத்தின் மாம்சம், எல்லா பெலவீனங்களையுமுடையவர் ஆனால் குற்றமில்லாதவர். பெலவீனராகவும், பாடுபடுகிறவராகவும், பசி தாகமுள்ளவராகவுமிருந்தாலும் கறை திரையற்றவர், தூயவர், மாசற்ற தேவ ஆட்டுக்குட்டி. இவ்விதமான சிக்கலான நபரத்துவ முடையவராக அவரது மகிமையைக் கண்டோம். தேவன் மனிதனாக தரம் குறைக்கப்பட்டவராக அல்ல, மனிதன் தேவனாக உயர்த்தப்பட்டதுமல்ல, ஆனால் தேவன் தாமே எல்லாவற்றிலும் தேவனுக்கு ஒப்பானவர் அப்படியே நாம் அவரை ஆராதிக்கிறோம். உலகம் எல்லாம் நமக்கு எடுத்துச் சொல்ல முடியாத அழகின் மெருகு அவரில் நாம் கண்டோம். பரலோகமே இதைவிட ஒரு அழகினை நமக்கு காட்ட முடியாது. இயேசுவைப் போல் அழகுள்ளோர் இப்பூவில் யார்? பரலோகிலும் அவரை விட நாம் விரும்பத்தக்கவர் யார்?

அவரது அன்பும் சுயதியாகமும்

அவரது நபரத்துவத்தில் மட்டுமல்ல, அவருடைய மகிமையை அவர் தாம் எடுத்துக் கொண்ட மிகப் பெரிய பணியின் நோக்கத்திலும் நாம் காண்கிறோம். அவரது உள் எண்ணம் அன்பு தான் - தகுதியற்ற, திரும்ப அன்பு செலுத்தாத, மகிமையின் கர்த்தரை சிலுவையிலறைகிற மக்கள் மீது காண்பிக்கும் அன்பு. ஒரு இருளான சூழலில் ஒளிர்விடும் ஆபரணம் போன்ற அன்பை நாம் கண்டோம். "இந்த அன்பிலுள்ள மகிமை வேறு எங்குமே காணப்படாத ஒன்று".

பின்பு நாம் அவருடைய சுயதியாகத்தின் மகிமைதனைக் கண்டோம். நமக்காக அவர் தமது கிரீடம், செங்கோல், ராஜரீக ஆடை, மேன்மை, பிதாவின் மாளிகைகள், கனம் எல்லாவற்றையும் விட்டு, ஒரு ஏழை மனிதனானார். அதிலும் ஒதுக்கப்பட்ட துன்புறுத்தப்பட்டவராக வந்தார். மேலும் மரண பரியந்தம் கீழ்ப்படிந்தவராகி, சிலுவை மட்டும் தன்னை ஒப்புக் கொடுத்தார். சரித்திரத்தில் பலருடைய தியாகங்களை நாம் படித்தாலும் அவருடைய சுயதியாகத்துக்கொத்த தியாகத்தைக் காண முடியாது. எப்போதுமே அவரில் சுயநலம் இருந்ததில்லை. அவர் அவருக்குச் சொந்தமானவரல்ல. அவருடைய சரித்திரத்தின் சுருக்கம் மத்.27:42-ல் எழுதப்பட்டுள்ளது "மற்றவர்களை இரட்சித்தான், தன்னைத் தான் இரட்சிக்கத் திராணியில்லை".

மகிமை நிறைந்த கிறிஸ்துவே, இதன்மூலம் நீர் மனிதரால் புறம்பாக்கப்பட்டும் நாங்கள் உமது மகிமையைக் காண முடிகிறது.

பொறுமையும் விடாமுயற்சியும்

அவருடைய பொறுமையின் மகிமையையும் நாம் கண்டோம். எல்லாவிதத்திலும் சோதிக்கப்பட்டும் ஒன்றிலும் அவர் தோல்வியடையவில்லை. உலக மகிமை அவர் பாதங்களுக்குக் கீழ் இருந்தாலும் அவற்றை விட்டு நமது இரட்சிப்பையே அவர் தெரிந்து கொண்டார். எகிப்தின் எல்லாப் பொக்கிஷங்களைவிட நிந்தைகளையே தெரிந்து கொண்டார். நாம் அவரைப் பரியாசம் பண்ணினோம், அவர் மறுப்பு தெரிவிக்கவில்லை. அவர் மீது உமிழ்நீரை விட்டோம், அவர் பதில் செய்யவோ பேசவோ இல்லை. அவரை உதாசீனப்படுத்தினோம், ஆனால் அவர் ஏற்றுக் கொள்ளப்பட முயற்சிக்கவில்லை. குற்றப்படுத்துகிறோம் ஆனால் நியாயாசனத்துக்கு முன்பாக அமைதியாயிருந்தார். இவை எல்லாவற்றையும் அவர் சகித்தார். திரளான தண்ணீர்களும் நேசத்தை அவிக்கமாட்டாது, வெள்ளங்களும் அவரது அன்பைத் தணிக்க முடியவில்லை. உலகத்தின் சகல பொருட்களும் கொடுக்கப்பட்டாலும் அவரது அன்பை தணிப்பதில்லை. நமது இரட்சகரைப் போன்ற இரத்தசாட்சி எவருமில்லை. பாவிகளின் முரண்பாட்டை சகிப்பதில் அவரைப்போல் எவருமில்லை.

மகா பெரிய தேவனே – இயேசுவே – நீர் இத்தகையவர் –நீர் மகா பெரிய தேவன் – உம்மைப் போல ஒருவரும் இங்கு இல்லை – நீர் சர்வவல்லவர். நீர் எங்கள் மத்தியில் வாசம் பண்ணும் போதும் உமது மகிமைதனைக் கண்டோம்.

மேலும் அவரது விடாமுயற்சியையும் கண்டு அவரது மகிமையை உணர்ந்தோம். முடிவுமட்டும் அவர் உலகில் தமக்குரியவைகளை நேசித்தார். "**முடிந்தது**" யோவா.19:30 என்று சொல்லுமட்டும் கஷ்டங்களை சகித்தார். அவர் மரித்தும் சீயோனுக்காகவும் எருசலேமுக்காகவும் இளைப்பாறாமல் அவரது

(4-ம் பக்கம் பார்க்க)

வாசகர் கவனத்திற்கு

வங்கி வழியாக காணிக்கை அனுப்புகிற வாசகர்கள் தகவல் தராவிட்டால், வாசகர் பெயர் எங்களுக்கு தெரியாதபடியால், ரசீது அனுப்ப இயலாது, பக்திரிக்கையும் அனுப்ப இயலாது.

உடனே எங்களுக்கு SMS or Whatsapp அனுப்புங்கள்

Mobile : **95432 21008**

Whatsapp : **9489740295**

e-mail:varukayinthoothan@hotmail.com

வருகையின் தூதன்

ஆசிரியர்:
வெஸ்லி தேவதாசன்
(Former Editor : S.Devadason 1955 - 1999)

Advisory Board : D. StanlyJones, S. Thomas Ganesh, Christy Samuel, Christinal P.Mony

"என்னை நோக்கிக் கூப்பிடு, அப்பொழுது நான் உனக்கு உத்தரவு கொடுத்து, நீ அறியாததும், உனக்கு எட்டாததுமான பெரிய காரியங்களை உனக்கு அறிவிப்பேன்". எரேமியா 33:3

"Call unto me, and I will answer thee, and shew thee great and mighty things, which thou knowest not". Jer. 33:3.

ஆசிரியர் கடிதம்

கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமானவர்களே,

பிதாவாகிய தேவனாலும், நம்முடைய இரட்சகராயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் கிருபையும் இரக்கமும் சமாதானமும் உண்டாவதாக.

2024 மார்ச் மாத தூதனுக்காக என் தேவனை நன்றியோடும், '**வெகு மனத்தாழ்மையுடனும், கண்ணீரோடும்**' துதிக்கிறேன்.

வழக்கமாக உபவாச ஜெபங்களை நடத்திக் கொண்டிருந்த நாட்களில், பாடல்கள் அனைத்தையும் பயிற்சி செய்த நாட்கள் உண்டு. பின் நாட்களில் பாடல்கள் எங்களுக்கு மிகவும் பழகி போனதால், எனது செய்தி வேளையில் பாடும் விசேஷ பாடல்களை மாத்திரம் முந்தின நாள் பயிற்சி செய்வோம். இவ்விதமாக ஒரு உபவாச ஜெபத்திற்காக விசேஷ பாடல் பயிற்சியின் போது நான் ஒரு பாடலை பாடி முடித்தவுடன், என்னோடு கீ போர்ட் வாசித்து ஆராதனை நடத்தும் அருமை தம்பி, அங்கிள் இது காலத்தால் அழியாத பாடல் என்று உணர்ச்சி பொங்க கூறினார். அப்படி என்னதான் பாடினேன்?

பல்லவி

கொஞ்ச காலம் இயேசுவுக்காக
கஷ்டப்பாடு சகிப்பதினால்
இந்தத் துன்பம் இன்பமாய் மாறும்
இயேசுவை நாம் காணும் போது

அனுபல்லவி

அவர் பாதம் விழுந்து பணிந்து
ஆனந்தக் கண்ணீர் வடிப்பேன்
எந்தன் ஓட்டம் ஜெயத்துடன் முடியும்
அந்த நாடு சுதந்தரிப்பேன்

சரணங்கள்

1. **கஷ்டம் கண்ணீர் நிறைந்த உலகை**
கடந்தென்று நான் மறைவேன்
ஜீவ ஊற்றருகே என்னை நடத்திச் சென்றே
தேவன் கண்ணீரைத் துடைத்திடுவார் – கொஞ்ச

2. **இந்த தேகம் அழியும் கூடாரம்**
இதை நம்பி யார் பிழைப்பார்
என் பிதா வீட்டில் வாசஸ்தலங்களுண்டே
இயேசுவோடு நான் குடியிருப்பேன் – கொஞ்ச

3. **பலியாக காணிக்கையாக**
படைத்தேனே உமக்காக
என்னை ஏற்றுக் கொள்ளும் இயேசு ஆண்டவரே
ஏழை நான் என்றும் உம் அடிமை – கொஞ்ச

அருமையான கர்த்தருடைய பிள்ளைகளே, தேவ கிருபையால் அதிக நேரம் வேலை செய்கிறேன். நமக்கு ஒரு அச்சகமும், அலுவலகமும், மிகவும் பாரமான வேலைகளும் உண்டு.

ஆனால் நம்முடைய 7 மணி நேர உபவாச ஜெபங்களை நடத்த பெலன் இல்லாதவனாய் இருக்கிறேன். தேவன் கிருபையாய் அடியேனை எழுப்பி நிறுத்தவும், முன்பு செய்த எல்லா ஊழியங்களையும் செய்யவும் தயவாய் ஜெபியுங்கள், நானும் உங்களுக்காக அனுதினமும் ஜெபிக்கிறேன்.

ஜெபமே ஜெயம்!

தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.
தேவ கிருபை உங்களோடிருப்பதாக.

உதவி : **94897 40295** உங்கள் அன்பு சகோதரன்
அலுவலகம் : **95432 21008** **வெஸ்லி தேவதாசன்**

2024 கர்த்தருக்கு முன்பாக உண்மையும் உத்தமுமாய் நடக்கும் ஆண்டு
I have walked before thee in truth and with a perfect heart. Isa.38:3

ஆண்டு காணிக்கை ரூபாய் 500

கிறிஸ்துவின் பிரசன்னமும் வல்லமையும்

The presence and power of Christ

Rich Carmicheal

நாங்கள் நன்றி செலுத்தும் விடுமுறை நாட்களை சமீபத்தில் அனுசரித்த போது எனது மகனும், மருமகளும் அவர்களுடைய மூன்று பெண் குழந்தைகளும் **(6, 3 வயது மற்றும் 17 மாதம்)** சிலநாட்கள் எங்களோடு செலவு செய்தனர். அவர்கள் சில மைல்கள் தூரத்தில் வாழ்ந்தபடியால் இந்த நாட்கள் நாங்கள் சேர்ந்திருந்தது எங்களுக்கு விசேஷித்த ஆசீர்வாதமாயிருந்தது. அப்படி தங்கியிருந்த கடைசி இரவில் சிறு குழந்தை சுகவீனமாக அழுது கொண்டிருந்தது. காலையிலும் அழுது கொண்டிருந்ததால் பெற்றோருக்கு சிறிது ஓய்வு கொடுக்கும்படியும் அவர்கள் புறப்பட வசதியாயிருக்கும் படியும் குழந்தையைக் கையிலெடுத்தேன், அவளை வைத்துக் கொண்டே சுற்றி நடக்கும் போது '**இயேசு நேசிக்கிறார்**' என்ற பாடலை மறுபடியும் மறுபடியும் பாடினேன்.

Jesus loves me, this I know, for the Bible tells me so.
Little ones to Him belong; **they are weak, but He is strong.**

அந்தப் பாடல் வரிகள் எளிமையாக குழந்தைகளுக் கேற்றதாகவும் இருந்தாலும் அந்தப் பாடல் வரிகள் என்னை பாதித்தது. சிறுபிள்ளைகள் அவருக்கு சொந்தமானவர்கள், **அவர்கள் பலவீனர். ஆனால் அவர் வலிமையானவர்.** அதிலுள்ள சத்தியம் ஆழமானதாகும். எல்லா வயதினருக்கும் ஏற்றதுமாயிருக்கிறது. **நாம் பலவீனர்; ஆனால் அவர் பெலமுள்ளவர்!**

We are weak, but He is strong.

நமது ஆதாரங்கள் குறைவுள்ளவை. நாம் எதிர்நோக்கும் துன்பங்களுக்கும் சவால்களுக்கும் போதுமானவையல்ல. ஆனால் கர்த்தர் நம்மோடிருந்தால், அவர் நம்மை பலப் படுத்தி உதவி செய்வாரானால் நாம் பலப்பட முடியும். அவரல்லாமல் நாம் எதையும் செய்ய முடியாது. (யோ.15:5) ஆனால் பிலிப். 4:13-ன்படி, "**என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்து வினாலே எல்லாவற்றையுஞ் செய்ய, எனக்குப் பெலனுண்டு**".

கிதியோனைப் பாருங்கள்! ஆ, "என் ஆண்டவரே நான் இஸ்ரவேலை எதினாலே இரட்சிப்பேன். இதோ மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது. என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன் என்றான". நியா.6:15 ஆனாலும் கர்த்தர் அவனைப் பார்த்து, பராக்கிரமசாலியே கர்த்தர் உன்னோடே இருக்கிறார்... உனக்கு இருக்கிற இந்த பலத்தோடே போ. நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பாய். உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா? ...நான் உன்னோடே கூட இருப்பேன். ஒரே மனுஷனை முறிய அடிப்பது போல நீ மீதியானியரை முறிய அடிப்பாய் என்றார்". (வச. 12,14,16)

(3-ம் பக்கம் பார்க்க)

அறிவிப்புகள்

கடிதம், மணியாடர், கொரியர் அனுப்ப வேண்டிய முகவரி:

வருகையின் தூதன்
நியுபோர்ட் தெரு,
நாகர்கோவில் – 629 001.
Ph. : 95432 21008

VARUKAYIN THOOTHAN
Newport Street,
Nagercoil-629 001.
Ph. : 95432 21008

காசோலை *(Cheque & Draft)*
வெஸ்லி தேவதாசன் (WESLEY DEVADASON)
என்ற பெயர் மட்டும் எழுதி அனுப்புங்கள்

வருகையின் தூதன் பத்திரிகை பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **2131010118439**
Punjab National Bank, Nagercoil -1. IFSC Code : **PUNB0213120**

வருகையின் தூதன் உபவாச ஊழியம்
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **3706010000002557**
I.O.B., Nagercoil-1 IFSC Code : **IOBA0000063**

வருகையின் தூதன் முன்னேற்றப்பணி
A/c. Name : **WESLEY DEVADASON,** A/c. No. : **61822200136904**
Canara Bank, Ngl-1 IFSC Code : **CNRB0001110**

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

கீதியோன் உண்மையிலேயே பல வீனமானவன். ஆனால் கர்த்தருடைய பிரசன்னம் மற்றும் மகிகையால் அவன் எல்லாவற்றையும் செய்ய முடிந்தது. விசுவாசத்தால் அவன் 1,35,000 மனிதர டங்கிய சேனையை 300 பேரை மட்டும் கொண்டு முறியடித்தான். 71-ம் சங்கீதம் மனதில் தென்படுகிறது. தன் சொந்த குறைபாடுகளை சங்கீதக்காரன் நினைவு கூருகிறான்: "முதிர்வயதில் என்னைத் தள்ளிவிடாமலும், என் பெலன் ஒடுங்கும் போது என்னைக் கைவிடாமலும் இரும்." (வச.9) அவனது சொந்த பெலன் குன்றி னாலும் தெய்வீக பெலத்தால் அவனது வாழ்வும், ஊழியமும் நிரம்பும் என்று விசுவாசித்தான். "நானே எப்பொழுதும் நம்பிக்கை கொண்டிருந்து மென்மேலும் உம்மைத் துதிப்பேன். என் வாய் நாள் தோறும் உமது நீதியையும், உமது இரட்சிப்பையும் சொல்லும், அவை களின் தொகையை நான் அறியேன். கர்த்தராகிய ஆண்டவருடைய வல்ல மையை முன்னிட்டு நடப்பேன். உம் முடைய நீதியைப் பற்றியே மேன்மை பாராட்டுவேன். ...இப்பொழுதும் தேவனே, இந்த சந்ததிக்கு உமது வல்ல மையையும், வரப்போகிற யாவருக்கும் உமது பராக்கிரமத்தையும் நான் அறிவிக் குமளவும், முதிர்வயதும், நரைமயிரு முள்ளவரைக்கும் என்னைக் கைவிடா திரும்". வச.14-16,18

இப்படிப்பட்ட ஒரு பாடத்தை அப்போஸ்தலனாகிய பவுலுக்கும் அவர் கற்பித்தார். அதற்கு அவர் "என் கிருபை உனக்குப் போதும் பலவீனத்தில் என் பலன் பூரணமாய் விளங்கும் என்றார்" (2 கொரி.12:9) பவுல் அதற்கு எப்படி பதிலளித்தார்? "ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டு வேன். அந்தப்படி நான் பலவீனமா யிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக் கிறேன். ஆகையால் கிறிஸ்துவினி மித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும் நிந்தைகளிலும் நெருக்கங்களிலும் துன்பங்களிலும் இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்". (2 கொரி.12:9,10) எத்தனை அருமையான சொற்றொடர்! கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி என்கிறார். நம் வாழ்விலும் ஊழியங்களிலும் இதுவல்லவா தேவை! கிறிஸ்துவின் பிரசன்னத்தாலும் வல்லமை யாலும் நாம் நிரப்பப்பட வேண்டுமே. கிறிஸ்துவையும் அவரிடமுள்ள எல்லா ஆதாரங்களையும் நாம் பெற்றால் தான் நம்முடைய ஓட்டத்தை நன்றாக முடிக்கவும் மற்றவர்களைவிட வித்தி யாசமாக வாழவும் முடியும். நம்மில் வாழும் கிறிஸ்து நம்மூலம் செயல்படுவ தால் நம்மைச் சுற்றி வாழுபவர்கள் அவரால் தொடப்பட வேண்டும்.

நம்மில் வாழும் கிறிஸ்து

மிகச் சிறப்பான செய்தி என்ன வெனில் கிறிஸ்து நமது வாழ்வை அவரது பிரசன்னத்தால் நிரப்ப விரும்புகிறார். அதன் மூலம், அவரது வல்லமை, அன்பு, சந்தோஷம், உருக்கம் எல்லாம் நம்மை நிரப்பும். அவ்வாறு அவர் நிரப்பும் போது அவரது மகிமையான தன்மை யையும் அளவிடாத ஆசீர்வாதங்களை யும் அடைவோம். ஏனெனில் தேவ குமாரனை நாம் ஏற்றுக் கொள்ளும் போது தேவனுடைய முழுமையும் நம்மில் வந்து சேரும் கொலோ.1:19. அவர் சிருஷ்டித்து நிலைநிறுத்த வல்லவர். (கொலோ. 1:16-17; எபி.1:3) முற்றிலும் ஜீவனும் ஒளியுமானவர். (யோ.1:4-5) கிருபையும் சத்தியமும் நிறைந்தவர் (யோ.1:14) ஆறுதலும், அன்பும், உருக்கமும் நிரம்பியவர். (2 கொரி.1:5; எபேசி.3:19; மத்.9:36) அவர் வெளி.22:13-ன்படி "அல்பாவும் ஓமேகாவும், ஆதியும், அந்தமும், முந்தின வரும் பிந்தினவருமாயிருக்கிறார்". நமது வாழ்வில் அவர் என்னென்ன செய்யக் கூடும் என்பதைப் பார்ப்போம்.

அவர் சந்தோஷத்தால் நம்மை நிரப்புகிறார்:

"என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும் படிக்கும் இவைகளை உங்களுக்குச் சொன்னேன்" யோவா.15:11.

அவர் சமாதானத்தால் நம்மை நிரப்புகிறார்:

"சமாதானத்தை உங்களுக்கு வைத்துப் போகிறேன். என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக் கிறேன் ...உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக" யோ.14:27.

அவர் நம்மை பலப்படுத்துகிறார்:

"என்னை பலப்படுத்துகிற கிறிஸ்து வினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு" பிலி.4:13.

அவர் நம்மை விடுதலை செய்கிறார்:

"கர்த்தருடைய ஆவியானவர் என் மேலிருக்கிறார்... சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும் பிரசித்தப்படுத்தவும் நொறுங்குண்டவர்களை விடுதலை யாக்கவும், கர்த்தருடைய அநுக்கிரக வருஷத்தைப் பிரசித்தப்படுத்தவும் என்னை அனுப்பினார்" லூக்.4:18,19.

அவர் நம்மை குணமாக்குகிறார்:

"அவரிடத்திலிருந்து வல்லமை புறப் பட்டு எல்லாரையும் குணமாக்கின படி யினாலே, ஜனங்கள் யாவரும் அவரைத் தொடும்படிக்கு வகை தேடினார்கள்." லூக்.6:19. "அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக் கொண்டு நம்முடைய நோய்களை சுமந்தார் என்று ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக் கப்பட்டது..." மத்.8:17. "அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்." ஏசா.53:5.

நமது தேவைகளைப் பூர்த்தி செய்கிறார்:

"என் தேவன் தம்முடைய ஐசுவரி யத்தின்படி உங்கள் குறைவையெல் லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமை யிலே நிறைவாக்குவார்." பிலி.4:19.

ஜீவனால் நிரப்புகிறார்:

"நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப் படவும் வந்தேன் என்றார்." யோ.10:10.

சோதனைகளை மேற்கொள்ள உதவி செய்கிறார்:

"ஆதலால் அவர்தாமே சோதிக்கப் பட்டுப் பாடுபட்டதினாலே, அவர் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார்." எபி.2:18.

வெற்றி தருகிறார்:

"உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு, ஆனாலும் திடன் கொள்ளுங் கள் நான் உலகத்தை ஜெயித்தேன் என்றார்." யோவா.16:33.

அவர் கிருபையையும் இரக்கத்தையும் தருகிறார்:

"ஆதலால் நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ் செய்யும் கிருபையை அடையவும், தைரியமாய் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்." எபி.4:16.

நம்மை உற்சாகப்படுத்தி ஆற்றுகிறார்:

"நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் நம்மிடத்தில் அன்புகூர்ந்து நித்திய ஆறுதலையும், நல்நம்பிக்கை யையும், கிருபையாய் நமக்குக் கொடுத் திருக்கிற நம்முடைய பிதாவாகிய தேவனும் உங்கள் இருதயங்களைத் தேற்றி, எல்லா நல்வசனத்திலும் நற்கிரியையிலும் உங்களை ஸ்திரப்படுத் துவாராக." 2 தெச.2:16-17.

அவர் நம்மை மன்னிக்கிறார்:

"நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக் கிறார்." 1 யோவா.1:9.

அவர் ஊழியத்தை வலுப்படுத்துகிறார்:

"அதற்காக நான் எனக்குள்ளே வல்லமையாய்க் கிரியை நடப்பிக்கிற அவருடைய பலத்தின்படி போராடிப் பிரயாசப்படுகிறேன்." கொலோ.1:29.

அவர் நம்மை தேற்றுகிறார்:

"அவர் என் ஆத்துமாவைத் தேற்றி தம்முடைய நாமத்தினிமித்தம் என்னை நீதியின் பாதைகளில் நடத்துகிறார்." சங்.23:3.

நமக்கு இளைப்பாறுதலைத் தருகிறார்:

"வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர் களே, நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப் பாறுதல் தருவேன்." மத்.11:28.

அவர் நமக்கு ஜீவதண்ணீரை தருகிறார்:

"... ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக் கடவன். வேதவாக்கியம் சொல்லுகிற படி, என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற வன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்." யோவா.7:37,38.

அவர் ஆவிக்குரிய தீருப்தியை தருகிறார்:

"ஜீவ அப்பம் நானே. என்னிடத்தில் வருகிறவன் ஒருக்காலும் பசியடையான். என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் ஒருக்காலும் தாகமடையான்." யோ.6:35.

அவர் நமக்காகப் பரிந்து பேசுகிறார்:

"மேலும் தமது மூலமாய் தேவனிடத் தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயு மிருக்கிறார்." எபி.7:25. "ஆக்கினைக்குள் ளாகத் தீர்க்கிறவர் யார்? கிறிஸ்துவே மரித்தவர், அவரே எழுந்துமிருக்கிறவர், அவரே தேவனுடைய வலது பாரிசத் திலும் இருக்கிறவர், நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே." ரோம.8:34.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மகிமை பிரகாசமாகவும் அவரது நீதி எரிகிற தீவட்டி போலும் விளங்கும் வரை அவர் இளைப்பாறுவதில்லை.

அவரது இறுதி வெற்றி

அவரது இறுதி வெற்றியில் அவரது மகிமையினைக் கண்டோம். சூரியன் இருளடைந்து, பூமியதிர்ந்து கன்மலைகள் பிளந்த போது கிறிஸ்து இவ்வுலகத்தின் மகிமைகளை இருளடையச் செய்து, கடின இருதயங்களை உடைத்து மரித்தோரை உயிரோடெழச் செய்தார். அவர் மரித்த போது இடி முழக்கங்களோடு நரகத்தின் அதிபதியை அந்தகாரங்களுக்குத் துரத்தி, தமது கைகளிலெடுத்து சங்கிலியால் கட்டி அவரது ரதச்சக்கரங்களோடு பிணைத்தார். நமது விசுவாசத்தால் நித்திய கன்மலைகள் மேல் அவர் சவாரி செய்வதையும், சிறைப்பட்டவர்களை சிறையாக்குவதையும், தூதர்கள் "வாசல்களே, உங்கள் தலைகளை உயர்த்துங்கள். அநாதி கதவுகளே உயருங்கள், மகிமையின் ராஜா உட்பிரவேசிப்பார்" சங்.24:7 என்று பாடிய போது வாசல்கள் விரிவாய்த் திறந்ததையும் பார்த்தோம். விசுவாசத்தால் வெற்றியாளர்களின் கூட்டத்தோடு சேர்ந்து தேவனுடைய "நல்லது உனது பிதாவின் சித்தத்தை முடித்து விட்டாய்" என கூறிய சத்தத்தையும் கேட்டோம். மகத்துவமாக தமது இளைப்பாறும் இடமாகிய சிங்காசனத்துக்கு ஏறிச் சென்றதையும் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருப்பதையும் கண்டோம். தொடர்ந்து "அல்லேலூயா, அல்லேலூயா, அல்லேலூயா சர்வவல்லவர் ஆட்சி செய்கிறார்" என்ற நீண்ட துதியும் பூமியிலிருந்தும், வானத்திலிருந்தும் எழும்பியது.

நமது விசுவாசம் கடந்து போன விஷயங்களுக்கு அப்பால் போய் விட்டது. அவருடைய மகிமையைக் கண்டோம். "பிதாவே .... நீர் எனக்குத் தந்த என்னுடைய மகிமையை நீர் எனக்குத் தந்தவர்கள் காணும்படியாக நான் எங்கே இருக்கிறேனோ, அங்கே அவர்களும் என்னுடனே கூட இருக்க விரும்புகிறேன்" யோவா.17:24 என்ற ஜெபம் கேட்கப்பட்டது. இரட்சிப்பின் இரதத்தில் தினமும் உட்கார்ந்து இருகரங்களையும் விரித்து ஏழ்மை நிறைந்த மக்களிடம், "சவுரியவானே, உமது மகிமையும், மகத்துவமுமாகிய உம்முடைய பட்டயத்தை நீர் உம்முடைய அரையிலே கட்டிக் கொண்டு" சங்.45:7 என்று சத்தமிட்டோம்.

அடிக்கடி நமது ஜெபங்கள் இப்படியிருக்கின்றன. "இயேசுவே, வாரும், பரலோகம் உமக்குக் கீழ்ப்படிகிறது, பூமி உமது பிரசன்னத்தால் அசைகிறது, நரகம் நடுங்குகிறது, பிசாசுகள் கலங்குகின்றன. வாரும், நீர் தமது அம்பை வில்லிலே வையும். உமது ஈட்டியை உயர்த்தும். உமது பாதையைத் தடுப்பவர் அல்லது உமது சமுகத்தில் நிற்பவன் யார்? காற்று முகத்தில் பறக்கடிக்கப்படும் பதரைப் போல அவர்கள் துரத்துண்டு, நெருப்புக்கு முன் தாள் போல முற்றிலும் தகனிக்கப் படுவார்கள்".

நாங்கள் விசுவாசத்தால் எல்லாவற் றிற்கும் முடிவு வந்தபின் பறந்து செல்லவும் அவரது இரண்டாம் வருகையை காணவும் முடிந்தது. அவருடைய மகிமையை பிதாவின் ஒரேபேறான குமாரனுக்கு சமமாகக் கண்டோம்.

"ஆனால் அப்படியல்ல
ஒரு முறை அவர் தாழ்மையில் வந்தார்
எதிரிகளுக்கு முன்பாக அமைதியான ஆட்டுக்குட்டியாக
இளைப்படைந்த மனிதனாய் துக்கம்
நிறைந்தவராய்"
அவர் வந்ததைக் கண்டோம்.

"அகோரமான ரூபக்கில்
வானவில் கிரீடமும் புயலாகிய அங்கியும்
கேருபீன்களின் கெஜைகளும் சாரீன் கெஜைகளும் உடைய
எல்லா ஜனத்துக்கும், நியமிக்கப்பட்ட நியாதிபதியாக"
அவர் வந்ததைக் கண்டோம்.

பின்பு நாம் நியாயத்தீர்ப்பைப் பார்த்தோம். அவரது வெற்றியின் மாட்சிமையால் சகிக்க முடியாத பூமி சுருட்டப்படுவதையும் அவரது எதிரிகள் அக்கினிக்கு முன் உருகும் மெழுகு போல் கரைந்து புலம்புவதையும் கண்டோம். அவர் ராஜ்யத்தை இறுதியாக தேவனாகிய பிதாவிடம் ஒப் படைப்பதையும் இவ்வாறு முழுவெற் றியால் ஆர்ப்பரிப்பதையும் கேட்டோம்.

"அதோ யெகோவாவின் கொடிகள் சுருட்டப்பட்டு,
வாளானது உறையிலிடப்பட்டு;
அவர் பேசுகிறார் : முடிந்தது!
இவ்வுலக அரசுகள் யாவும்,
அவரது குமாரனுடையவைகளே.

"பின்பு முடிவு – அவரது கோலின்கீழ்
மனிதனுடைய கடைசி சத்துரு விழுவான்
அல்லேலூயா! கிறிஸ்துவே தேவன்,
கிறிஸ்துவில் தேவன் எல்லாம் அவரே."

அவருடைய அன்புக்காக அவரை சாஷ்டாங்கம் பண்ணுவோம்

Let us Adore Him For His love

John Newton (1725 - 1807)

அனைவரும் ஒன்றாகச் சேர்ந்து நற்காரியங்களைச் செய்தால் அது நன்மையாக முடியும் என்றும் இதற் கிடையில் நிச்சயமான அடைக்கலம், இளைப்பாறுதல், ஆதரவு, பாதுகாவல் இவை கிடைக்கும் என்பதும் ஒரு விசுவாசிக்கு எத்தனை மகிழ்ச்சியானது! குழப்பங்கள் நெருங்குகையில் ஆண்டவர் அருகிலிருப்பதும், நமது கவலைகளை யெல்லாம் அவர் மேல் வைத்து விடுவதும், அவரது கண்கள் நம்மேலிருப்பதை விசுவாசிப்பதும், அவரது காதுகள் நமது ஜெபத்தைக் கவனிக்க திறந்திருப்பதும் எத்தனை ஆறுதலளிக்கின்றன. இத்தகைய ஒரு மேய்ப்பனின் கீழ் நாம் பயப்படத் தேவையில்லை. தீயையும் தண்ணீரையும் நாம் கடக்க வேண்டியிருந்தாலும் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் அவர் நம்மோடிருந்து, தம்மை நமக்காக வல்லவராகக் காண்பிப்பார்.

நாம் ஒரு நல்ல உலகத்திற்குப் பிரயாணம் செய்கிறோம். அங்கு தீமை மற்றும் குறைவானவை இருப்பதில்லை. நாம் நித்தியகாலமாக தேவனோடும் நம்மனைவரோடும் வாழுவோம். இந்த ஆசீர்வாதமான நம்பிக்கை நம் முன்னாலிருந்து நமது சோர்ந்து போன ஆவிகளை எழுப்புதலடையச் செய்யட்டும். மேலும் கடினங்களை சகிக்க நல்ல போர்ச்சேவகராய் விளங்க நம்மில் விருப்பத்தை ஏற்படுத்தட்டும். நாமோ கண்ணீரோடு விதைத்து கெம்பீரத்தோடு அறுப்போம். தேவன் தாமே நமது கண்ணீர்கள் யாவையும் என்றென்றைக்குமாக துடைத்துப் போடுவார்.

அவருடைய அன்புக்காக அவரை சாஷ்டாங்கம் பண்ணுவோம். அந்த அன்பு உயரம், ஆழம், நீளம், அகலம் இவை எல்லாவற்றிலும் மனித அளவுக்கு எட்டாதது. அந்த அன்பு அவரை வெறுமையாக்கச் செய்து, ஒரு அடிமையின் ரூபம் எடுக்க வைத்து, சிலுவை மரணம் வரை கீழ்ப்படியச் செய்து, நமது இழந்து போன நிலையில் நம்மைக் கண்டு பிடித்து, நாம் அவரைத் தேடாத போது அவரே நம்மைத் தேடி வந்து, நமது வேதனைகளில் நமக்கு சமாதானத்தை அருளினார்.

இப்போதும் நாம் செய்யும் எல்லாத் தவறுகளையும் அவரது அன்பு சகித்துக் கொண்டிருக்கிறது. மேலும் நம்மேல் கண்ணோக்கமாயிருந்து, வழிநடத்த ஆயத்தமாகவும், ஆறுதலளிக்கவும், குணமாக்கவும், களைப்பின்றி நேசிக்கவும், மேற்கொள்வதாகவும், மாறததாகவும், எல்லா எதிர்ப்புகளையும் சந்திக்கக் கூடியதாகவும், நம்மேலுள்ள கரிசனையில் பூரணமானதாகவும், நம்மைப் பரிபூரணம், தூய்மை, சந்தோஷம் இவற்றிற்கு வழி நடத்துவதாயும், அவர் சமுகத்தின் மகிமையில் களிகூருவதாகவுமிருக்கிறது.

இது தான் கிறிஸ்துவின் அன்பு! இதுவே ஆச்சரியம், சந்தோஷம், தூதர்களின் பாடல். இதன் உணர்வு நமது இருதயத்தில் ஊற்றப்பட்டு வாழ்வை இன்பமயமாக்குகிறது.

இன்னும் அதிகமாக அவரை நேசிக் காத என் இருதயம் நல்லதல்ல. ஆனால் அவரையே என் வாழ்வில் எல்லாவற் றிற்கும் எல்லாமாக ஆக்கிக் கொள்ளும் வாஞ்சையை தருவார் என நம்பி, இழப்பு மற்றும் நஷ்டங்களில் அவரோடு நிற்பேன்.

முக்கிய அறிவிப்பு

10-ம் தியதிக்குள் பத்திரிகை வரக் குவரினால் உடனே தகவல் தாருங்கள்.

Mobile : **95432 21008**

Whatsapp : **94897 40295**

e-mail:varukayinthoothan@hotmail.com

ஹெலன் ஈவான்
நறுமணம் வீசும் வாழ்க்கை

Helen Ewan - A fragrant life

James A.stewart

"நாங்கள் எங்களையே பிரசங்கியாமல், கிறிஸ்து இயேசுவைக் கர்த்தரென்றும் எங்களையோ இயேசுவினிமித்தம் உங்கள் ஊழியக்காரரென்றும் பிரசங்கிக்கிறோம். இருளிலிருந்து வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் சொன்ன தேவன் இயேசுக் கிறிஸ்துவின் முகத்திலுள்ள தமது மகிமையின் அறிவாகிய ஒளியைத் தோன்றப் பண்ணும் பொருட்டாக எங்கள் இருதயங்களிலே பிரகாசித்தார். இந்த மகத்துவமுள்ள வல்லமை எங்களால் உண்டாயிராமல் தேவனால் உண்டாயிருக்கிறதென்று விளங்கும்படி இந்தப் பொக்கிஷத்தை மண்பாண்டங்களில் பெற்றிருக்கிறோம்". *(2 கொரி.4:5-7)*

ஸ்காட்லாந்து தேசத்திலுள்ள கிளாஸ்கோ என்ற எனது பட்டணத்தில் ஒரு பலத்த அசைவு எற்பட்டு, நான் இரட்சிக்கப்பட்ட போது எனது வயதையுடைய ஒரு பெண் பிள்ளையும் இரட்சிக்கப்பட்டாள். அவளது பெயர் ஹெலன் ஈவான். கிறிஸ்துவில் புதுவாழ்வை ஆரம்பித்ததும் ஆண்டவரை கர்த்தராக முழுவதும் அங்கீகரித்து முடிசூட்டிய தால்தூய ஆவியால் நிரப்பப்பட்டாள். அவள் உன். 5:1-ல் கூறப்பட்டுள்ளது போல, பூர்த்தியாய்க் குடிப்பதற்காக கர்த்தருடைய அழைப்பைப் பெற்றவள். "...இயேசு நின்று சத்தமிட்டு, ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து பானம் பண்ணக்கடவன் வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவ தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்".(யோ.7:37,39) ஜீவ தண்ணீரின் நீரோடைகள் ஹெலனுடைய வாழ்விலிருந்து பாய ஆரம்பித்தது.

ஹெலன் ஈவான் 1910-ல் சாதாரண குடும்பத்தில் ஒரே மகளாகப் பிறந்தாள். பெற்றோர் இருவரும் கிறிஸ்துவை எல்லாவற்றுக்கும் மேலாக நேசித்த வர்கள். தேவ குமாரன் ஒருவரே அந்த முழுக்குடும்பத்திற்கும் மையமாக விளங்கினார். தங்கள் வாழ்வின் எல்லாப் பகுதிகளிலும் தேவனைப் பிரியப் படுத்துவது அவர்கள் நோக்கமாயிருந்தது. மூன்று பேரும் தனித்தனியாக வேதத்தை ஒழுங்காகப் படித்தனர்.

அவள் வாழ்வு பதினான்காம் வயதில் மனந்திரும்பியதிலிருந்து கர்த்தருடைய மகிமையால் ஒளி வீசியது. தேவன் தமது கிருபையினால் இந்த சாதாரண 'மண்பாண்டதின்' மூலம் சுவிசேஷத்தின் வல்லமையையும் மேன்மையையும் பெருகப்பண்ணுவதற்காக அவளுடைய இருண்ட ஆத்துமாவில் பிரகாசித்த படியால் அவளது வாழ்வு சாதாரணமாயிருந்தாலும் தேவ மகிமையால் சுடர் விட்டது. அவள் தூய ஆவியால் நிரப்பப் பட்டபடியால் கிறிஸ்துவாலும் நிரப்பப் பட்டிருந்தாள். அவள் தேவ வசனத்தை ஒளியூட்டும் தூய ஆவியானவரின் நடத்துதலோடு படித்ததால் அவர் ஆண்டவராகிய இயேசுவின் பொக்கிஷங்களை அவளுக்கு வெளிப்படுத்தினார். *(யோவா.16:13-15)* இது அவள் இருதயத்தை சந்தோஷத்தால் நடமாடச் செய்தது.

அவளது ஜெப வாழ்க்கை

அவள் அதிகாலையில் 5 மணிக்கு விழித்து ஆண்டவரோடு உறவு கொள்வது வழக்கம். குளிரினால் தனது கவனம் சிதறாதபடி தன்னைக் கவனித்துக் கொள்வாள். அயல் நாடுகளில் வாழுபவர் களுக்காகவும் அவள் ஜெபிப்பாள்.

துதி ஆராதனையோடு அவள் உறவை ஆரம்பிப்பாள். இருதயத்தை சூடுபடுத்த தேவ வசனத்தை வாசிப் பாள். தன்னோடு ஸ்காட்லாந்தில் வாழ்ந்த R. Murray Mc Cheyne கூறிய **'பார்வை கிரட்சிக்கிறது. ஆனால் உற்று நோக்குதல் பரிசுத்தப்படுத்துகிறது'** என்ற கூற்றின்படி தனது ஆண்டவரின் முகத்தை அதிக சந்தோஷத்தோடு உற்று நோக்குவாள்.

அதன்பின் தனது மன்றாட்டு ஊழியத்தை ஆரம்பிப்பாள். நண்பர் களுக்காக, குடும்பத்துக்காக, தனது கூட்டாய்மையிலுள்ளவர்களுக்காக, நூற்றுக்கணக்கான மிஷனெறிகளுக் காக மற்றும் மனந்திரும்பாதவர்களுக் காக ஜெபிப்பாள். அவர்கள் மனந் திரும்புமட்டும்அவள் ஜெபிப்பாள். அவளது மரணத்துக்குப்பின் அவளது தாயார் ஹெலனது டயறிகளை எனக்குக் காண்பித்தார்கள். அவளுடைய ஜெபங்களும், விண்ணப்பங் களும் நிச்சயமானவைகளும் உறுதியான வைகளுமாயிருந்தன. அவள் ஜெபிக்க ஆரம்பித்த நாட்களும் அவற்றிற்கு பதிலளிக்கப்பட்ட நாட்களும் குறிப் பிடப்பட்டிருந்தன.

இழந்து போன ஆத்துமாக்களை தேடுதல்

நான் தெருக்களில் நடுஇரவில் துண்டு பிரதிகளை வினியோகித்த போது, ஹெலன் தனித்தாள் ஆத்தும அறுவடையில் விறுவிறுப்பாயிருப் பாள். இயேசுவின் அன்பை குளிர்ந்த இரவுகளில் பாவத்தில் ஈடுபட்டிருக்கும் பெண்களுக்கு அவர்களை அணைத்துக் கொண்டு கூறுவாள். குடிகார மனிதர் களையும் கூட இயேசுவண்டைக் கொண்டு வர முயற்சிப்பாள்.

சுவிசேஷக் கூடுகைகளில் அவள் இழந்துபோன ஆத்துமாக்களுக்காக ஜாக்கிரதையாயிருப்பாள். துக்கத்தோடிருக்கும் பெண்களை உற்று கவனிப் பாள். தேவ ஆவியானவரின் நடத்துதலால் அவர்களருகில் மெதுவாகச் சென்று ஜெபத்தோடு உட்கார்ந்திருப் பாள். அவர்கள் எழும்பும்போது, அவர் களோடு சென்று அன்றைய செய்தியைப் குறித்து பேசி அவர்களுடைய இதய பாரம் நீங்கும்படி செய்வாள். இந்த முறையில் விளக்குத்தூண்களின் கீழும், பஸ் நிறுத்தங்களிலும் அனேக மக்களை ஆதாயப்படுத்தினாள்.

கிளாஸ்கோ பல்கலைக் கழகத்தில் பிரவேசித்தபோது, வீட்டிலிருந்து பல மைல் தூரங்கள் நடந்து வந்ததால் சுவிசேஷ பிரதிகளை தன் பாதையில் அவள் கொடுக்க முடிந்தது. பல்கலைக் வளாகத்திலும் கூட அனேக மாணவர் களை கிறிஸ்துவுக்கு நேராக வழிநடத்த அவள் மகிழ்வுடனிருந்தாள்.

கிறிஸ்துவின் நறுமணம்

ஹெலன் கிறிஸ்துவின் நற்கந்தத்தை தன்னுடன் எடுத்துச் சென்று ஆவியின் வல்லமையை வெளிப்படுத்தினாள். அவளுடைய சரீரம் நடமாடும் தூய ஆவியின் ஆலயமாயிருந்தது. *(1 கொரி. 6:19-20)* எனவே அவள் சென்ற இடமெல் லாம் தேவ வல்லமை வெளிப்பட்டது.

லண்டனில் இரு விசுவாசிகளான உடன் விரிவுரையாளர்களுடன் பேசிக் கொண்டிருந்தேன். அப்போது கிளாஸ்கோ கல்லூரி வளாகத்தில் தான் அறிந்த ஒரு விசேஷித்த பெண்மணியைக் குறித்துக் கூறினார். அவள் வளாகத்தில் சென்ற இடமெல்லாம் கிறிஸ்துவின் நறுமணம் பின்தொடர்ந்தது என்று கூறினார்.

உதாரணமாக குழுவாக சில மாணவர்கள் உட்கார்ந்து அசுத்தமான கதைகளைக் கூறி வேடிக்கையாக பேசிக் கொண்டிருந்தால் அவள் வருவதை கண்டவுடன் பேச்சை நிறுத்தி அமைதி யாகிவிடுவார்கள். அவள் கடந்து செல்லும் போது அவளிடம் காணப் படும் தேவ பிரசன்னத்தையும் வல்லமை யையும் அவள் அவளறியாமல் விட்டு செல்வாள்.

பல்கலைக்கழக ஜெபக்கூடுகை களில் அவள் இருந்தாலும் சத்தமாக ஜெபித்தாலும் ஜெபிக்காவிட்டாலும் தேவ பிரசன்னத்தை அவர்கள் உணர்ந் தார்கள். இதற்கெல்லாம் காரணம் ஓரே ஒரு பெண்மணி. ஆம் அவள் பெயர் ஹெலன் ஈவான். அவள் ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுகிற ஒரு விசேஷித்த நபர்.

தேவ வசனத்தின்மேல் அதிக வாஞ்சை

அவள் தேவ வசனத்தின் மீது அதிக பசியுள்ளவளாகவும் தெய்வீக சத்தியங் களை ஆழமாக ஆவிக்குரியபடி வாஞ்சித்து ஆர்வத்தோடு படிக்கிறவளாகவும் இருந்தாள். அவள் விருப்பமான பகுதி களைமட்டுமல்ல ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரை கருத் தோடு படித்தாள். எனவே ஆழமான புத்தியுள்ள தேவ பிள்ளையாக விளங் கினாள். இதனால் பதினாறாம் பதினே ழாம் வயதிலே அவள் ஆண்டவரை குறித்து ஆழ்ந்த அறிவுள்ள பிள்ளையாக விளங்கினாள்.

அவளுடைய பாதங்கள் பரிசுத்த வேத வாக்கியங்கள் என்ற உறுதியான பாறைமீது நின்றன. பல்கலைக்கழகத்

(6-ம் பக்கம் பார்க்க)

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் தனது படிப்பில் நல்ல மதிப்பெண் கள் பெற முயற்சித்தாலும் தனது வேத வாசிப்பையும் தியானத்தையும் அவள் தொடர்ந்து நிறைவேற்றினாள்.

அவள் அதனால் மிகவும் சமநிலை யுள்ள ஒரு கிறிஸ்தவ பெண்மணியாக விளங்கினாள். அவளுடைய வாழ்வில் வீண் பேச்சுகளுக்கே இடமில்லாதிருந் தது. சுத்தமான இனிய வார்த்தைகள் எப்போதும் அவள் வாயிலிருந்து வெளிவந்தன. அவள் வாழ்க்கையின் உயர் நோக்கத்தைக் கொண்டிருந்தாள். அவளை முழுமையாக கிறிஸ்து நிரப்பியிருந்தபடியால் பரிசுத்தமான வாழ்வினாலும் தியாகமான சேவை யாலும் தேவனை மகிமைப்படுத்திக் கொண்டிருந்தாள்.

ஹெலனுடைய மரணம்

ஐரோப்பாவின் கிழக்குப் பகுதி யிலுள்ள ரஷியா மக்களுக்கிடையில் நான் பின்நாட்களில் உழைக்கவிருந் தேன். அந்த மக்கள் மத்தியில் ஹெலன் மிஷனெரியாகப் பணியாற்ற தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தாள். அந்த ஊழியத்திற்காக ரஷிய மொழியைக் கற்றுக் கொண்டிருந்தாள். ஆனால் அவளது 22-வது வயதில் தேவன் தம் முடைய ஞானம், அன்பு இவற்றின்படி தம்மிடமாகச் சேர்த்துக் கொண்டார்.

அவளது விடுமுறை காலத்தை ஃபிஃப் என்ற தேசத்தில் ஒரு பெண் மணியுடன் தங்கி தனது எஜமானின் பணியில் தீவிரமாக ஈடுபட்டுக் கொண்டிருந்தாள். திடீரென நோய் வாய்ப்பட்டு, மரணமடைந்தாள். அது எங்கள் அனைவரையும் திடுக்கிடச் செய்யும் ஒரு அனுபவமாயிருந்தது.

வட இங்கிலாந்தில் ஒரு சுவிசேஷ நற்செய்திக் கூடுகையில் இருந்தேன். இந்த செய்தியால் திணறிப் போன நான் சாப்பிடவும் தூங்கவும் முடியமாலிருந் தேன். அந்த துயரத்தில் நான் மட்டுமல்ல ஸ்காட்லாந்து, கிரேட் பிரிட்டன் போன்ற தேசங்களிலுமுள்ள ஆயிரக் கணக்கான மக்கள் கண்ணீர் வடித்தனர். தூர இடங்களிலுள்ள மிஷன் நிலையங் களிலிருந்த பிரிட்டிஷ் மிஷனெறிகள் கண்ணீர் விட்டுக் கதறினர். இப்போது அவர்களை எல்லாம் இரக்க ஆசனத் திற்கு நேராக வழிநடத்துவது யார்? யார் இந்த வெற்றிடத்தை நிரப்பி அவளைப் போல பணி செய்வார்கள்?

ஒரு வாலிபப் பெண், படித்துக் கொண்டிருக்கும்பொழுதே, எந்த ஒரு பிரசங்கமும் செய்யாமலே, ஒரு தனிப் பாடல் பாடாமலும் தன் இல்லத்தை விட்டு இருநூறு மைல்களைக் கடந்து செல்லாமலுமிருந்தும் ஒரு பெரிய படைத்தலைவன் விழுந்தது போல மக்கள் ஏன் உலகம் முழுவதும் கலங்கி னார்கள்? ஒரே ஒரு விளக்கத்தை மட்டுமே கூறமுடியும். அவள் தூய ஆவியால் நிரப்பப்பட்டிருந்தாள். அவள் சாதாரண பெண்மணிதான். ஆனால் தன்னை முழுவதுமாக அர்ப் பணித்தபடியால் அவள் அசாதாரண மான பெண்மணியாக மாறி விட்டாள். திறந்தமுகமாக அவரோடு நேரம் செலவழித்து அவரது மகிமை பெற்றுக் கொண்டு அவரையும் அவரது மகிமையையும் பிரதிபலித்தாள்.

ஹெலனைப் போல உங்களை முற்றிலும் ஆண்டவருக்கு அர்ப் பணித்து அவளைப் போல முழுமை யாய் தேவனுடைய மகிமையை பிரதிபலிப்பீர்களா? இது உங்கள் ஜெபமாக இருக்கட்டும்!

முழுமையான மகிழ்ச்சியான ஒப்படைப்பு
நான் என்னை உமக்கு அளிக்கிறேன்

உமக்கு ஒருவருக்கே முற்றிலுமாய்
அது எப்போதுமிருக்கட்டும்.
ஓ தேவ குமாரனே நீர் என்னை நேசிக்கிறீர்
உமக்கே நான் எப்போதும் சொந்தம்
எனக்குள்ளவையெல்லாம் முடிந்தவரை
இன்றிலிருந்தே உமக்கே சொந்தம்
ஆண்டவராகிய இயேசுவே என்னை ஆளும்
எனது இதயம் உமது சிங்காசனமாகட்டும்
அன்பு இரட்சகா நான் உமக்கே
எந்நாளும் உமக்கே சொந்தம்
ஆண்டவராகிய இயேசுவே வந்து ஆளும்
எல்லாவற்றின் மீதும் ஆட்சி செய்யும்!
எப்போதும் உமக்கு அடங்கியிருக்கவும்
உத்தமாயிருக்கவும் செய்யும் ராஜாவே!

தனித்தாள் பணி

Personal Work

Andrew Murray (1828 - 1917)

"உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும். அப்பொழுது பாதகருக்கு உமது வழிகளை உபதேசிப் பேன்; பாவிகள் உம்மிடத்தில் மனந் திரும்புவார்கள்." *சங்.12:13*

"விசுவாசித்தேன் ஆகையால் பேசுகிறேன்; நான் மிகுதியும் வருத்தப் பட்டேன்." *சங்.116:10*

"**பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து...**" *அப்.1:8*

மீட்கப்பட்ட ஒவ்வொருவரும் ஆண்டவருக்கு சாட்சியாயிருக்க அழைக்கப்படுகிறார்கள். தெய்வீக நடையில் மட்டுமல்ல ஆண்டவரை எல்லோரும் அறிய தனிப்பட்ட முயற்சி எடுப்பார்கள். எனது நாவு, எனது பேச்சு, இவை மற்றவர்களோடு தொடர்பு கொண்டு அவர்களை தாக்கமடையச் செய்யும் ஒரு ஊடகம். நான் எனது உதடுகளை ஆண்டவருக்காகப் பேச அர்ப்பணிக்காத போது அவருக்கு எனது அர்ப்பணிப்பு முழுமையானதல்ல.

இந்தப் பணிக்கு அதிகமான தேவையிருக்கிறது. அனேகக் கிறிஸ்த வர்கள் தேவ வசனம் கேட்பதில் உற்சாக மாயிருந்தாலும் அவர்கள் இரட்சிப்பின் வழியைப் புரிந்து கொள்ளவில்லை. ஆண்டவராகிய இயேசு திரள்கூட்ட மான மக்களுக்குப் பிரசங்கித்தது மட்டுமல்ல, தனிப்பட்ட நபர்களுக்கு அவர்களோடு தனித் தனியாகவும் பேசினார். வேத வாக்கியங்கள் முழு வதும் ஆண்டவர் தங்களுக்குச் செய்த தையும் அதன் மூலம் அவர்கள் மற்றவர் களுக்கு ஆசீர்வாதமாக மாறியதையும் கூறுகின்றன. எல்லா மீட்கப்பட்ட ஆத்துமாக்களும் போதகரோடு ஒத்து ழைக்க வேண்டும். அவர் இந்த உலகில் அவரது ஆண்டவருக்கு சாட்சியாயிருக் கிறார். அவருடைய சொந்த வாழ்வு ஆரோக்கியமாக வளர அவர் ஆண்ட வரை அறிக்கை செய்யவும் அவருக் காகப் பணி செய்யவும் வேண்டும்.

அந்தச் சாட்சி தனிப்பட்ட சாட்சி யாயிருக்க வேண்டும். நமக்கு, அவர் என்னை மீட்டார், உங்களையும் மீட்பார். இந்த மீட்பை ஏற்றுக்கொள்ள மாட்டீர்களா? வாருங்கள், உங்களுக்கு வழி காண்பிக்கிறேன் என்று சொல்ல தைரியம் வேண்டும், நீங்கள் மீட்கப் பட்டு விட்டீர்களா? ஏன் பின்தங்கி யிருக்கிறீர்கள்? ஆண்டவரிடம் செல்ல நான் உதவி செய்யட்டுமா? என்ற கேள்விகள் கேட்கப்பட அனேகர் விரும்புகிறார்கள். பெற்றோர் பிள்ளை களிடம் எனது குழந்தையே ஏற்க னெவே ஆண்டவராகிய இயேசுவை ஏற்றுக் கொண்டுவிட்டாயா? வேத பாடசாலை மாணவர்களிடம் ஆசிரியர் கள் அவர்கள் உண்மையாக ஆண்ட வரை ஏற்றுக் கொண்டிருக்கிறார்களா? எனக் கேட்க வேண்டும். நண்பர்கள் தங்களது நண்பர்களிடம் இக்கேள்வி யைக் கேட்க வேண்டும்.

இந்தப் பணி அன்புடன் செய்யப் பட வேண்டும். மற்றவர்கள் அவர்களை நீங்கள் நேசிக்கிறதை உணர வேண்டும். அன்பின் தாழ்மையும், சாந்தமும் இயேசுவில் காணப்பட்டது போல நம்மில் காணப்பட வேண்டும். ஒவ் வொரு நிலையிலும் இயேசுவுக்கு உங்களை அர்ப்பணித்து அவருடைய அன்பால் நிரப்பப்படுங்கள். இந்த அன்பிலுள்ள விசுவாசத்தால் இப்பணி யைச் செய்ய முடியும். "தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக் கொள் ளுங்கள். அல்லாமலும் நீங்கள் பகுத்தறி வுள்ளவர்களாயிருந்து, சிலருக்கு இரக்கம் பாராட்டி சிலரை அக்கினியி லிருந்து இழுத்து விட்டு, பலத்தோடே இரட்சித்து" *(யூதா.21,23)* "அன்பு எல்லா வற்றையும் பெற்றுக் கொள்ளும். அது சிலுவையில் மேற்கொண்டுவிட்டது".

இந்தப் பணி, விசுவாசப் பணி - அன்பினால் செயல்படும் விசுவாசம். ஆண்டவர் உங்களை பயன்படுத்த விரும்புகிறார், அவர் அப்படியே செய்வார் என்ற விசுவாசம் வேண்டும். உங்கள் பலவீனங்களைக் குறித்த பயம் வேண்டாம். வேதத்தைப் படித்து அவருக்காகப் பேசுகிறவர்களுக்கு அவர் அளித்த வாக்குத்தத்தங்களைப் பாருங் கள். தொடர்ந்து ஆத்தும ஆதாயத்துக் காக உங்களை அர்ப்பணியுங்கள். இந்த

(7-ம் பக்கம் பார்க்க)

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

உண்மையில் நிலைத்திருக்கும் உங்களை கடைசி மட்டும் நிலைத்திருக்கச் செய்வார். உங்கள் பணி பலவீனத்தோடும் பயத்தோடுமிருந்தாலும் ஆசீர்வாதம் வராதது போலிருந்தாலும் தைரியமாயிருங்கள். அவரது சமயத்தில் அறுவடை செய்வோம். தேவ வல்லமையில் அவரது ஆசீர்வதங்களுண்டு. ஏற்ற காலத்தில் அவர் ஜெபத்தைக் கேட்பார். "மரணத்துக் கேதுவல்லாத பாவத்தைத் தன் சகோதரன் செய்ய ஒருவன் கண்டால், அவன் வேண்டுதல் செய்யக் கடவன்". அப்பொழுது அவனுக்கு ஜீவனைக் கொடுப்பார். *1 யோ. 5:16*

எல்லாவற்றிற்கும் மேலாக இது மிக முக்கியம். இயேசுவோடுள்ள உறவில் இந்தப் பணியைச் செய்யுங்கள். அவரோடு நெருங்கி வாழ்வதோடு அவருக்காக முற்றிலுமாய் வாழுங்கள். இயேசு உங்கள் வாழ்வில் எல்லாவற்றிற்கும் எல்லாமானவர். அவர் உங்களிலிருந்து பேசவும் கிரியை செய்யவும் கூடும். ஆண்டவரின் ஆசீர்வாதத்தாலும் அவரது ஆவியாலும், அன்பாலும் நிரம்பியிருந்தால் மட்டுமே நீங்கள் ஆசீர்வாதமாயிருக்க முடியும். அவர் தொடர்ந்து உங்களுக்காக இருப்பதை பகிர்ந்து கொள்ள முடியும். நீங்கள் நன்றாய் இருக்கிறீர்களா? நீங்கள் ஆண்டவராகிய இயேசுவை ஏற்றுக் கொண்டிருக்கிறீர்களா? என்ற கேள்விகளை அன்போடும், தைரியத்தோடும், தாழ்மையோடும் கேட்க முடியும். நீங்கள் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாய் வாழும் போது ஆண்டவரின் வாக்கின் படி அளவில்லாத ஆசீர்வாதங்களை உங்கள் மேல் பொழிவார்.

இளம் கிறிஸ்தவனே, இயேசுவுக்கு சாட்சியாயிரு. தன்னை முற்றிலும் ஆண்டவருக்கு ஒப்படைத்தவனாக வாழுவாயாக.

அவர் நம்மை மதிபீடும் போது நமது கிரியைகளை கொண்டு அல்ல, நமது அன்பின் உறுதியை கொண்டே மதிப்பீடு செய்வார்.

இயேசுவை நோக்கி

Looking unto Jesus

By J.C. Ryle (1816 - 1900)

அனுதின வாழ்வில் வல்லமையாகவும், சக்தி நிறைந்தவர்களாகவுமிருக்க ஒரே இரகசியம் இயேசுவை நோக்கிப் பார்ப்பது தான். மகிமை நிறைந்த அப்போஸ்தலர்கள், இரத்த சாட்சிகளின் கூட்டம். மனிதருக்குத் தாக்கத்தை ஏற்படுத்திய பரிசுத்தர்கள், உலகத்தைக் கலக்குகிறவர்கள் அனைவரும் ஒரே முத்திரையைப் பதித்தவர்கள் - அது அவர்கள் இயேசுவையே நோக்கிப் பார்த்ததுவே.

நோக்கிப் பார்ப்பது என்பது - பிற எல்லா கவனச் சிதறல்களிலுமிருந்து விலகி ஒரே பொருளைக் கவனமாகப் பார்ப்பதைக் குறிக்கிறது. நாம் நோக்கிப் பார்ப்பது ஒரு நபர் - ஒரு தத்துவமோ, காணக்கூடாத இறையியல் கருத்தோ அல்ல. அது ஒரு ஜீவனுள்ள நபர், அவர் இயேசு என்ற தேவ குமாரன்.

முதல் மற்றும் எளிய வகையான கிறிஸ்தவன் யாரெனில் வாழ்ந்துக் கொண்டிருக்கும் தெய்வீக நபரை நம்பினவரும் நேசித்தவருமாகும். ஆதி கிறிஸ்தவர்கள் உத்தம தனிப்பட்ட பரலோக நண்பரை அதாவது நமக்காக சிலுவையிலறையப்பட்டு, மரித்து, உயிர்த்த அவரை அறிந்து, விசுவாசித்து, நேசித்து அவருக்காக ஜீவனைக் கொடுக்கவும் ஆயத்தமாயிருந்தனர். இன்றைய திருச்சபைகளும் விசுவாசிகளும் அப்படியிருந்தால் நலமாயிருக்கும்.

அவரது மரணத்தை நோக்கிப் பார்ப்பது

உள்ளான சமாதானத்தைப் பெற தினந்தோறும் அவரது மரணத்தை நோக்கிப் பார்ப்பது அவசியம். வேத வாக்கியங்களில் ஒரே ஒரு சமாதானத்திற்கான ஆதாரம் வெளிப்படுத்தப் பட்டுள்ளது. அது கிறிஸ்து பாவ நிவாரண பலியாக சிலுவையில் கொடிய மரணத்தினை ஏற்றதாகும். அந்தப் பெரிய சமாதானத்தின் ஒரு பங்கினை நாம் விசுவாசத்தோடு நமது பாவங்களுக்காக மரித்த இயேசுவை நோக்கிப் பார்க்க வேண்டும்.

அந்த சமாதானத்தைத் தொடர்ந்து பெற்றுக் கொள்ள தினமும் நமது பாவங்களை அறிக்கையிட வேண்டும். *ஏசா.53:6*-ன்படி "நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர் மேல் சுமத்தினார்" எனவே அவரை நோக்கிப் பார்ப்போம். ஆண்டவரே நான் பாவம் செய் தேன் - நீர் எனக்காக மரித்தீர். உம் வாக்கின்படியே நான் எனது ஆத்துமாவை உம் மீது இளைப்பாறச் செய்கிறேன்.

அவரது மன்றாட்டை நோக்கிப் பார்க்க வேண்டும்

அவர் நமக்காகப் பரலோகில் நமது முக்கிய தேவைகளுக்காக மன்றாடிக் கொண்டிருக்கிறார். அவரது தேவையை நாம் நிச்சயமாக உணர வேண்டும். வாழ்க்கைப் பாதையில் பாவ மன்னிப்பு, கிருபை, புதிய இருதயம் ஆகியவற்றோடு ஆரம்பித்தாலும், பாதுகாவலாக பரம வீட்டை அணுக முடியாது. செய்ய வேண்டியதும் சகிக்க வேண்டியதும் சுமக்க வேண்டியதும் ஏராளம் இருப்பதால் அடிக்கடி சோர்ந்து போகிறோம். நமது இருதயங்கள் பலவீனமானதும் கொடியதுமாயிருக்கிறது. பிசாசு வேகமாய்ச் செயல்படுகிறான். நம்மைத் திரும்பிப் பார்த்து எகிப்துக்குத் திரும்பிப் போகச் செய்கிறான்.

இப்படிப்பட்ட நிலையில் ஏற்கனவே தேவனுடைய வலது பாரிசத்திலிருந்து நமக்காகப் பரிந்து பேசிக் கொண்டிருப்பவரை நோக்கிப் பார்க்க வேண்டும். இதையே வேதம் நமக்குக் கற்று தருகிறது. நாம் மேலே பார்க்க வேண்டும். நம்மையும் நமது பலவீனங்களையும் பார்க்கக் கூடாது. அவர் நமக்காக மரித்து உயிர்த்தவர் மட்டுமல்ல நமக்காக பரிந்து பேச பரத்தில் காணப்படுகிறார்.

"நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில் அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப்பட்டோமானால் ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே". *(ரோம.5:10)* "ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கிறவன் யார்? கிறிஸ்துவே மரித்தவர் அவரே எழுந்துமிருக்கிறவர். அவரே தேவனுடைய வலதுபாரிசத்தில் இருக்கிறவர். நமக்காக வேண்டுதல் செய்கிறவரும் அவரே". *(ரோம.8:34)* இதை மனதில் வைத்து *எபி.7:25*-ல் "மேலும் தமது மூலமாய்த் தேவனிடத்தில் சேருகிறவர்களுக்காக வேண்டுதல் செய்யும்படிக்கு அவர் எப்பொழுதும் உயிரோடிருக்கிறவராகையால் அவர்களை முற்றுமுடிய இரட்சிக்க வல்லவராயுமிருக்கிறார்".

தூங்காதவரும் உறங்காதவருமான ஒரு வழக்கறிஞர் பிதாவுடனிருப்பது எத்தனை ஆறுதலானது அவர் தொடர்ந்து நமக்காக வழக்காடி புதிய கிருபைகளை நமக்குப் பெற்று தருகிறார். அவர் நம்மை எல்லா இடங்களிலும் கவனித்துக் கொண்டிருக்கிறவரும் மறவாதவருமாயிருக்கிறார். நாம் அவரை நினைக்காமலிருந்தாலும் அங்கும் இங்கும் சென்றாலும், நமது தினசரி செயல்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தாலும், அவர் நம்மை மறப்பதில்லை. அமலேக்கிய ரோடு பள்ளத்தாக்கில் போரிட்டானும் மோசேயைவிட மேலான ஒருவர் கரங்களை உயர்த்தி நமக்காய் பரத்திலிருந்து மன்றாடுவதால் வெற்றி உறுதி.

அவருடைய மாதிரியைப் பாருங்கள்

"நான் உங்களுக்குச் செய்தது போல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன்". *யோ.13:15* பவுல் இப்படிக் கூறுகிறார், "நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறது போல நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்" *1 கொரி.11:1*. இதை நினைவில் கொண்டு யோவான் "அவருக்குள் நிலைத்திருக்கிறேனென்று சொல்லுகிறவன், அவர் நடந்தபடியே தானும் நடக்க வேண்டும்" *1 யோ.2:6*-ல் கூறுகிறார்.

கிறிஸ்தவனின் எதிர்பார்ப்பு, "...தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன் குறித்திருக்கிறார்". *(ரோ.8:29)* நாம் கிறிஸ்தவர்களாக அவரைப் பின்பற்றி நாசரேத்தின் தச்சுப்பட்டறையிலிருந்து கல்வாரிச் சிலுவைவரை பின்பற்றுவோம். அவர் எப்போதும் தூயவர், துன்பம் செய்யாதவர், தமது வார்த்தையிலும் செயலிலும் பரிபூரணமானவர்.

(8-ம் பக்கம் பார்க்க)

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

எதிராகத் தோன்றும் குணங்களின் அற்புதமான இணைப்பு அவர். மாய்மாலத்திலும், சுய நீதியிலும் வாழ்பவர்களை எதிர்ப்பவர். ஆனால் பாவிகளில் பிரதான பாவிகளை ஏற்றுக் கொள்பவர். சனகெரிப் சங்கத்தில் ஞானமாக விவாதம் செய்பவர், ஒரு குழந்தை கூட புரியம்படி போதிக்கிறவர். பெலவீன சீஷர்களிடம் பொறுமையுள்ளவர். எரிச்சலூட்டுகிறவர்களால் கோபமடையாதவர். பரிதபிக்கிறவரும், தன்னை வெறுக்கிறவரும், ஜெப வீரரும், அன்பும் உருக்கமும் பொங்கி வழிகிறவரும், சுயநலமற்றவரும், எப்போதும் தனது பிதாவின் பணியில் ஈடுபட்டிருப்பவரும், நன்மை செய்கிறவராய் சுற்றி நடப்பவரும், பிறருக்கு சேவை செய்பவரும் தனக்கு சேவை செய்ய விரும்பாதவருமாகிய நாசரேத் தூரின் இயேசுவைப் போல யார் வாழமுடியும்.

நாம் ஜெபித்து முயற்சித்து இயேசுவை நமது மாதிரியாகவும் அந்தஸ்தாகவும் கொள்ளுவோம்.

அவரது இரண்டாம் வருகைக்காக அவரை நோக்கிப் பார்ப்போம்

அவரை நம்பிக்கையின் ஊற்றாகவும் ஆறுதலாகவும் நோக்குவோம். ஆதி கிறிஸ்தவர்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்காகக் காத்திருந்தனர். அவர்களது முக்கியமான ஆறுதல் அவரது வருகையின் நம்பிக்கையே. அவர்கள் அவர் கொடுத்த வாக்குத்தத்தை உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருந்தார்கள்....“வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப் போனாரோ அப்படியே மறுபடியும் வருவார்”. (அப்.1:11) ரோம சக்ரவர்த்திகள், புறஜாதி ஆளுநர்கள் போன்றவர்களின் ஆட்சியிலும், கொடுமையிலும் தங்கள் சொந்த அரசர் விரைவாக வந்து அவர்களுக்காக வாதாடுவார் என நம்பியிருந்தனர். பாடுபடுத்துகிறவர்களும் ஒடுக்கிறவர்களும் விலக்கப்பட்டு, பெரிய மேய்ப்பனானவர் அவர்களைப் பத்திரமாக ஒரு மந்தையில் சேர்ப்பார் என நம்பியிருந்தனர். “இயேசுக் கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்” பிலி.3:20. “...அவருடைய குமாரனாகிய இயேசு பரலோகத்திலிருந்து வருவதை நீங்கள் எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறதையும் அறிவிக்கிறார்கள்”. (1 தெச.1:10)

எல்லாக் காலங்களிலும் சபையிலுள்ள கிறிஸ்தவர்கள் முன்பு போலவே இந்நாட்களிலும் இந்த ஆறுதலுடன் வாழுகிறார்கள். இந்தப் பழைய உலகம் புதிய ஒழுங்கை விரும்புகிறது. மனித சமுதாயத்தின் இணைப்பு விழுந்து விட்டது. எங்கு பார்த்தாலும் அராஜகம், ஒழுங்கின்மை, பகைமை, பொறாமை, நம்பிக்கையின்மை, சந்தேகம், வெறுப்பு போன்ற தீமைகள் மலிந்து விட்டன. யுத்தங்கள், பஞ்சங்கள், கொள்ளை நோய்கள், துன்மார்க்கம், சபைகளில் தூக்கம், தேசங்களின் குழப்பம் போன்றவைகளைக் காண்கிறோம்.

அனேக வேதனையான காரியங்கள் நம்மை சுற்றிலும் நடந்து கொண்டிருக்கின்றன. இவற்றைப் பார்த்து நல்லவை நடக்காதா என்று பெருமூச்சு விடுகிறவர்கள் எங்கே? “ஆண்டவரே இது எத்தனை காலம்? நாங்கள் புலம்பிக் கொண்டும், காயங்களைக் கட்டிக் கொண்டும், கசப்பான பாத்திரங்களில் குடித்துக் கொண்டும் புலம்பிக் கொண்டும் இருக்கப் போகிறோமா? இதற்கு முடிவு உண்டா?”

உண்மையான வேதவாக்கிய ஆறுதல் அவரது இரண்டாம் வருகையே. எனவே அவரை நோக்கிப் பார்ப்போம். தகுதியான அரசர் வந்து பழையவைகளையும் சாத்தானையும் சாபத்தினையும் பூமியிலிருந்து எடுத்துப் போடுவார். மரித்தோர் உயிர்த்தெழுதலையும் பரிசுத்தவான்கள் எடுத்துக் கொள்ளப்படுவதையும், எல்லாம் புதிதாகி கஷ்டங்கள் பாவம் எல்லாம் அகன்று புதிய ராஜ்யம் ஸ்தாபிக்கப்படுவதையும் நீதியான ஆட்சியையும் எதிர் பார்ப்போம்.

அவரை இன்னும் அதிகமாக எப்படி நேசிக்கலாம்?

How may we love Him more?

F.B. Meyer

அதிக நேரம் தனியாக உட்கார்ந்து நமக்காக அவர் என்ன செய்திருக்கிறார்? அவர் எப்படிப்பட்டவர்? அவர் நமக்கு பதினாயிரங்களில் சிறந்தவர், முற்றிலும் அழகானவர் என்பதை சிந்தனை செய்வோம். உள்ளான மனிதனை அனல் மூட்டி எழுப்புவோம். தனி அறையிலோ, தனியாக நடந்தோ, சத்தமாக அவரோடு பேசும் பழக்கத்தை உருவாக்குவோம்.

இருதயத்தைத் திறந்து தூய ஆவியானவர் தேவ அன்பை நம்மில் ஊற்றவும் அதன் மூலம் நீங்களும் அவரை திரும்ப நேசிக்கவும் செய்வோம். விசேஷமாக அவரது அருமை அன்புக்கு ஈடாக உங்கள் சுய ஒறுப்பு முயற்சி ஆகியவற்றால் அவரை நேசிக்க பல காரியங்களைச் செய்யுங்கள். நாம் நமது அன்பை பிறருக்கு காண்பிக்கும் போது அவர் நமக்குக் காண்பித்த அன்பை புரிந்து கொள்வோம். “பிரியமானவர்களே, ஒருவரிலொருவர் அன்பாயிருக்கக் கடவோம்; ஏனெனில் அன்பு தேவனால் உண்டாயிருக்கிறது; அன்புள்ள எவனும் தேவனால் பிறந்து அவரை அறிந்திருக்கிறான்; அன்பில்லாதவன் தேவனை அறியான். தேவன் அன்பாகவே இருக்கிறார்”.(1 யோ.4:7-8)

இயேசுவின் அன்பின் அறிவுக்குத் திறவுகோலாய் அமைவது எழுச்சியான பாடல்களைப் பாடுவதும், அதிக ஆழமான உணர்வுகளை எழுப்புவது மல்ல, அவருக்கான பணிகளை அன்றாடம் அமைதியாக சுய ஒறுப்புடன் செய்வதே. நிச்சயமாவே இதுவே நிலத்தில் நம்மை கோதுமை மணிகளாய் விதைப்பதற்குரிய வழியாகும். அவர் நம்மை மதிப்பீடும் போது நமது கிரியைகளை கொண்டு அல்ல, நமது அன்பின் உறுதியை கொண்டே மதிப்பீடு செய்வார். அன்பின் பாட சாலையில் விரைவாகப் பட்டம் பெற நாம் கற்றுக் கொண்ட அனைத்தையும் செயல்படுத்துவோம்.

பல்கலைக்கழகத்தில் தனது படிப்பில் நல்ல மதிப்பெண்கள் பெற முயற்சித்தாலும் தனது வேத வாசிப்பையும் தியானத்தையும் அவள் தொடர்ந்து நிறைவேற்றினாள். அவள் அதனால் மிகவும் சமநிலையுள்ள ஒரு கிறிஸ்தவ பெண்மணியாக விளங்கினாள்.

Contact:

VARUKAYIN THOOTHAN
7, Newport Street, W.C.C. Road,
Nagercoil - 629 001.
Kanyakumari District,
SOUTH INDIA.

Mobile: +91 095432 21008
Whatsapp: +91 094897 40295
email: varukayinthoothan@hotmail.com

சிந்தனைக்கு

இயேசுவின் அன்பின் அறிவுக்குத் திறவுகோலாய் அமைவது எழுச்சியான பாடல்களைப் பாடுவதும், அதிக ஆழமான உணர்வுகளை எழுப்புவதுமல்ல, அவருக்கான பணிகளைஅன்றாடம் அமைதியாக சுய ஒறுப்புடன் செய்வதே.

தேவன் தமது **கிருபை**யினால் இந்த சாதாரண ‘**மண்பாண்டதின்**’ மூலம் சுவிசேஷத்தின் வல்லமையையும் மேன்மையையும் பெருகப்பண்ணுவதற்காக அவளுடைய (ஹெலன் ஈவான்) இருண்ட ஆத்துமாவில் பிரகாசித்தபடியால் அவளது வாழ்வு சாதாரணமாயிருந்தாலும் தேவ **மகிமை**யால் சுடர் விட்டது.

ஹெலன் ஈவான் சாதாரண பெண்மணிதான். ஆனால் தன்னை முழுவதுமாக அர்ப்பணித்தபடியால் அவள் அசாதாரணமான பெண்மணியாக மாறி விட்டாள். திறந்த முகமாக அவரோடு நேரம் செலவழித்து அவரது மகிமை பெற்றுக் கொண்டு அவரையும் அவரது மகிமையையும் பிரதிபலித்தாள்.

அனுதின வாழ்வில் வல்லமையாகவும், சக்தி நிறைந்தவர்களாகவுமிருக்க ஒரே இரகசியம் **இயேசுவை** நோக்கிப் பார்ப்பது தான்.

Printed and Published by Wesley Devadason and Printed at Varukayin Thoothan Offset Press and Published at 3/8, Newport Street, Nagercoil - 629 001.
Editor : Wesley Devadason